விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com








சங்கு 26
ஒலி 046 வள்ளுவர் ஆண்டு 2056 தை 21 திங்கட்கிழமை (03.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


### மாற்றுக் காணியைப் பெற்றுத் தாருங்கள்
## தையிட்டி திஸ்ஸ விகாரைக் காணி உரிமையாளர்கள் ஆளுநரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்கள் விகாரைக்குச் சொந்தமான அயலிலுள்ள காணியையும் மாற்றீடாகத் தமக்கு வழங்க வேண்டும் என தன்னிடம் கோரியிருந்ததாக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தையிட்டியில் தற்போது திஸ்ஸ விகாரை அமைந்துள்ள ▶15

## வவு.வில் தொலைத்தொடர்பு கோபுரத்திலிருந்து வீழ்ந்தவர் பலி

(வவுனியா)

வவுனியா, மகாறம்பைக்குளத்தில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் இருந்து வீழ்ந்த ஒருவர் பலியாகியுள்ளதாக வவுனியாப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி திருத்தப் பணிகளை முன்னெடுத்து வந்த ஊழியரே நிலை தடுமாறி கீழே வீழ்ந்துள்ளார்.

இதனால் படுகாயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் அவர் ▶15

### பாராளுமன்ற உறுப்பினர்களின்
## ஓய்வூதியத்தை இரத்து செய்யப் பிரேரணை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்கான பிரேரணையை எதிர்வரும் பாராளுமன்றக் கூட்டத்தொடரில் முன்வைக்கவுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த விடயத்தைக் கொழும்பில் ▶15

### புலி ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்த
# மகிந்தவை அரசு பழிவாங்குகிறது
### பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம்

(அநுராதபுரம்)

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அரசாங்கம் பழிவாங்குகின்றது என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)



### இந்தியாவின் பட்ஜெட்டில்
### இலங்கைக்கு
## ரூ.300 கோடி ஒதுக்கீடு

(கொழும்பு)

இந்தியாவின் வரவு செலவுத் திட்டத்தில் இலங்கைக்காக 300 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசாங்கத்தால் நேற்று முன்தினம் 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்பட்டது.

நிதியமைச்சர் என்ற வகையில் ▶15

## அப்பாவி விவசாயிகளை அரசு தொடர்ந்து ஏமாற்றுகிறது



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

அப்பாவி விவசாயிகளை அரசு தொடர்ந்து ஏமாற்றி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தினார்.

விசேட அறிக்கை ஒன்றிலேயே அவர் ▶15

### அக்னியுடன் சங்கமமானது
## மாவையின் புகழுடல்



(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் மறைந்த மூத்த தலைவர் மாவை சோ.சேனாதிராஜாவின் புகழுடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை தகனம் செய்யப்பட்டது.

மாவிட்டபுரத்தில் ▶15

### 24 மணி நேரமும்
## கடவுச்சீட்டு அலுவலகத்தை திறந்து வைக்க நடவடிக்கை

(குருநாகல்)

கடவுச்சீட்டு அலுவலகத்தை 24 மணிநேரமும் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் கல்கமுவ பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டு நெருக். ▶15

## மாணவர்களுக்கு போதை விற்பனை
### வவுனியாவில் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் மாணவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்த ஒருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப் ▶16

### வடமராட்சி செம்பியன்பற்றில்
## கயிறு கட்டிய நிலையில் குளத்திலிருந்து சடலம் மீட்பு


(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று தெற்குப் பகுதியில் நேற்று அதிகாலையில் 70 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவரின் சடலம் உடலில் கயிறு கட்டிய நிலையில் குளத்தில் இருந்து மீட்கப்பட்டது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த முதியவர் வேதனை தாங்க முடியாமலே தனது உயிரை இவ் ▶15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி திருக்குறள் வளாகம் திறந்து வைப்பு




மாவிட்டபுரத்தில் சிவபூமி அறக்கட்டளையால் அமைக்கப்பட்ட சிவபூமி திருக்குறள் வளாகம் நேற்று(02) திறந்து வைக்கப்பட்டதை படங்களில் காணலாம்.

# பாரியளவு நிதியை இலங்கைக்கு கடனாக வழங்குகிறது உலக வங்கி

இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய கடன் உதவியை இந்த ஆண்டு நாட்டுக்கு வழங்குவதற்கு உலக வங்கி ஒப்புக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த ஜனாதிபதி,

ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும், உலக வங்கியுடனும் அண்மையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

அதன்போது, இலங்கைக்குப் பெருந்தொகையான நிதியை வழங்குவதற்கு உலக வங்கி இணங்கியுள்ளது.

அதேநேரம், 250க்கும் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு பாதணி கொள்வனவுக்காக தலா 3,000 ரூபாய் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் பாதீட்டில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல புலமைப்பரிசில் அதிகரிக்கப்படவுள்ளதுடன், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்குக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதுடன், பொலிஸ், சுங்கம் போன்றவற்றுக்கும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அதேநேரம், அரச பணியாளர்களுக்குப் பொருத்தமான வகையில் அடிப்படை வேதனத்தில் அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

முதலீட்டாளர்களுக்குக் கடந்த காலங்களில் விதிக்கப்பட்டிருந்த கடுமையான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவுள்ளன.

அதேநேரம் மாங்குளம், பரந்தன் மற்றும் காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் பொருளாதார மத்திய நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

அண்மையில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் தாம் முன்னெடுத்த விஜயங்களின்போது, விமானப் பயணச் சீட்டுக்கான செலவைத் தவிர வேறு எந்தச் செலவுகளுக்கும் அரச நிதியைப் பயன்படுத்தவில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் தங்கியிருக்கும் நாட்களின் அடிப்படையில் தமக்கு வழங்கப்படும் கொடுப்பனவையும் தாம் மீள அரசாங்கத்திடமே கையளித்துள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)


வடமராட்சியில் 27 ஆண்டு காலமாக மகளிர்க்கான பயிற்சிகளை வழங்கி வருகிறது

## தூரிகை



பயிற்சி வகுப்புக்களுக்கு புதிய பயிலுநர்கள் இணைத்துக் கொள்ளப்படுகிறார்கள்



- Cake Decoration (Cake Icing)
- Bridal and Other Ladies Make-up
- Hair,
- Dress Making (Tailoring),
- Aari Embroidery Work,
- Fabric Painting & Printing



வாரநாள், வார இறுதிநாள் இரு பிரிவுகள்

தேவையான பயிற்சிகளை மட்டும் பழகும் வசதி

வடக்கின் மிகக் குறைந்த பயிற்சிக் கட்டணங்கள்

கட்டணமின்றி சில சிறு சுயதொழிற் பயிற்சிகள்

ஒவ்வொரு பயிற்சிக்கும் தனியான சான்றிதழ்கள்

பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வோரில் முதல் நிலையில் உள்ளவர்களுக்கு தூரிகையில் உடனடி வேலை வாய்ப்பு



ஒவ்வொரு பயிற்சியும் ஆரம்பமாகும் திகதி அனுமதியின் போது தெரிவிக்கப்படும்

(C-2183)

## தூரிகை நுண்கலை வளாகம்

241, பிரதான வீதி
நாவலர்மடம், நெல்லியடி
077 525 9954

மத்திய கல்லூரி வீதி
நெல்லியடி
077 914 3171



## பாராட்டி வாழ்த்துகிறோம்



அயற் பாடசாலை தலை சிறந்த பாடசாலை எனும் புதிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமர சூரிய அவர்களின் மீள் கருத்தை நிலை நிறுத்தினேன் என உள்ளந் திறந்து கொட்டுகின்றார். யாழ்/கச்சாய் மகா வித்தியாலயத்தில் 2023(2024) க.பொ.த. சாதாரண பரீட்சையில் 9A பெற்ற மாணவி

**செல்வி நவீனன் மீதுஷா**

இதே பாடசாலையில் 2017 தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் மேற்குறிப்பிட்ட மாணவி நவீனன் மீதுஷா 180 புள்ளிகளைப் பெற்றும் நகர்ப்புற பாடசாலைகளுக்கு செல்வதற்கு மறுத்து தனது பாடசாலையிலேயே தொடர்ந்து கல்வி கற்று 9A பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாராட்டுவோர் : நண்பர் குழாம்
வினோபா நூலகம், வினோபா நகர், கச்சாய்.

(C-2176)



## வட மாகாண அதிபர்கள் சங்கம்

### பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக்குழுத் தெரிவும்

காலம் : 16.02.2025 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 10.00 மணி

இடம் : யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி

அனைத்து அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- புதிய உறுப்பினர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.

செயலாளர்,
வடமாகாண அதிபர்கள் சங்கம்.

(3303)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தனி நாடே எங்கள் தாகம்’

## பிரபாகரன் புஜத்தில் குத்திய எம்.ஜி.ஆர்!

துக்கையாண்டி ஐ.பி.எஸ் 'ஊர்க் காவலன்' என்ற தன் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியுள்ளார்.

தமிழகக் காவல்துறைக் கூடுதல் தலைவர் பதவி வரை உயர்ந்து ஓய்வுபெற்ற துக்கையாண்டி, பரபரப்பான பல வழக்குகளைக் கையாண்டவர். ஜெயலலிதா மீதான ஊழல் வழக்குகளை விசாரித்தபோது கவனம் பெற்றவர். பிறகு ஜெயலலிதா ஆட்சியில் கருணாநிதி மீது போடப்பட்ட ஊழல் வழக்கையும் விசாரித்தவர்.

பயிற்சி டி.எஸ்.பி-யாக இருந்தபோது முதல்வர் எம்.ஜி.ஆரின் நேரடிப் பார்வை இவர்மீது பட்டது. பிறகு தேவாரத்துடன் இணைந்து நக்சல்களை அடக்கும் பணியில் ஈடுபட்டார். 'என்கவுண்டரில் எனக்கு நம்பிக்கை இல்லை' எனும் இவர், நக்சல்கள் உருவாக என்ன காரணம் என்பதையும் நேர்மையாக எழுதியிருக்கிறார். நக்சல் ஒழிப்புப் படை செய்த தவறுகளையும் விவரித்திருக்கிறார். கியூ பிராஞ்ச் எஸ்.பி-யாக இருந்தபோது இலங்கைப் போராளிகளுடன் இவர் தொடர்புகொள்ள நேர்ந்தது. அதுபற்றி துக்கையாண்டி எழுதிய சில பகுதிகள் இங்கே...

**“உங்களது படங்கள்தான் எனக்கு முன்மாதிரி. அவற்றில் நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்களோ, அவற்றையே எனது இயக்கத்தின் கொள்கைகளாக பாவிக்கிறேன்” என்று கூறினார். எம்.ஜி.ஆர் உடனே பிரபாகரனைக் கட்டிப்பிடித்து, அவரது வலது புஜத்தில் செல்லமாய் ஒரு குத்து விட்டார். உடனே பிரபாகரன் அடுத்த புஜத்தையும் காட்டி, ‘இன்னும் ஒரு குத்து’ என்று கேட்டவுடன் எம்.ஜி.ஆர் உருகிப்போனார்.**

### உணவுக்குச் சிரமப்பட்ட ஈழப் போராளிகள்!

கியூ பிரிவில் பொறுப்பேற்றதும் இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் தலைவர்களை ஒவ்வொருவராகச் சந்தித்தேன். அப்போது தமிழீழ விடுதலை புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரன் இங்கு இல்லை. ஏனைய குழுக்கள் புளொட் உமா மகேஸ்வரன், டெலோ செல்வம், இ.பி.ஆர்.எல்.எஃப் பத்மநாபா, ஈரோஸ் செல்வகுமார் போன்றோரைச் சந்தித்தேன். இந்திய அரசு அந்தப் போராளிக் குழுக்களுக்குப் பயிற்சி அளித்து ஆயுதங்களும் வழங்கி, இலங்கை அரசுக்கு எதிராகப் போர் புரிய அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் விடுதலை புலிகள் தவிர மற்றக் குழுக்களால் இலங்கைக்குச் செல்ல முடியவில்லை. அவர்கள் கடலுடன் போராடிக் கரையேறினாலும் அங்கு இலங்கை இராணுவத்துடனோ அல் லது விடுதலைப்புலிகள் உடனோ போராட வேண்டியிருந்தது. அதனால், இலங்கைக்குப் போகாமல் கையில் ஆயுதங்களுடன் தமிழ் நாட்டிலேயே தங்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார்கள்.

உணவு உண்பதற்கு, அவர்களிடம் பணம் இல்லை. வயிற்றிலே பசி, கையிலே ஆயுதம். வருவாய் ஈட்ட எந்த வேலையும் இல்லை.

பல போராளிக் குழுக்கள் தங்கள்




முகாமைச் சுற்றி இருக்கும் வீடுகளில் அரிசி மற்றும் வேறு தானியங்களைத் தானமாக வாங்கி உணவு உண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள். இந்த நிலையை உணர்ந்த நான் உடனே பத்து மூட்டை அரிசியை வாங்கி, பட்டினி கிடக்கும் போராளிகளுக்கு வழங்கிவிட்டு, அரசுக்கு இது தொடர்பாக ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தேன். அந்த அறிக்கையை ஏற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தது.

அதன்படி பொதுத்துறைச் செயலர் ஏ.எம்.சுவாமிநாதன் போராளிக் குழுக்களின் தலைவர்களை அழைத்து வரச் சொன்னார். அப்போதைய பொதுப்பணித்துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனைச் சந்தித்துப் பேச சொன்னார். அமைச்சரும் முதல்வருக்குப் பரிந்துரை செய்து, அதன்பின்னர் அனைத்துப் போராளிக் குழு உறுப்பினர்களும் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை ஆயிரம் ரூபாய் பெற்றுச் செல்லலாம் என்று முடிவானது. இதனால், பட்டினி கிடந்த போராளிகள் அனைவரும் காப்பாற்றப்பட்டனர். இது போராளிக் குழுக்கள் மத்தியில் எனது மரியாதையை உயர்த்தியது.

### பிரபாகரனின் புஜத்தில் குத்திய எம்.ஜி.ஆர்!

இந்தக் காலகட்டத்தில் பிரபாகரன் தமிழ்நாட்டுக்கு வந்தார். அவரை எனது காரில் முதல்வர் வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். அதற்கு முன் அவரிடம், துப்பாக்கி மற்றும் வேறு ஏதேனும் ஆயுதங்கள் வைத்துள்ளாரா என்று கேட்டேன். “அண்ணா, என்னைச் சோதனை செய்துகொள்ளுங்கள்” என்று தானே முன்வந்தார். அவரைச் சோதனை செய்தபின் முதல்வரின் ராமாபுரம் இல்லத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கே முதல்வரின் மெய்க் காப்பாளர் ஆறுமுகமும் பிரபாகரனைச் சோதனை செய்தார். பின்னர், வரவேற்பு அறைக்கு பிரபாகரனை அழைத்துச் சென்றோம்.

முதல்வர் மின்தூக்கி வழியே கீழே வந்து அவரைச் சந்தித்தார். உணர்ச்சிகரமான சந்திப்பாய் இருந்தது. எம்.ஜி.ஆரைப் பார்த்து பிரபாகரன், “உங்களது படங்கள்தான் எனக்கு முன்மாதிரி. அவற்றில் நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்களோ, அவற்றையே எனது இயக்கத்தின் கொள்கைகளாக பாவிக்கிறேன்” என்று கூறினார். எம்.ஜி.ஆர் உடனே பிரபாகரனைக் கட்டிப்பிடித்து, அவரது வலது புஜத்தில் செல்லமாய் ஒரு குத்து விட்டார். உடனே பிரபாகரன் அடுத்த புஜத்தையும் காட்டி, ‘இன்னும் ஒரு குத்து’ என்று கேட்டவுடன் எம்.ஜி.ஆர் உருகிப்போனார்.

அதன்பிறகு எம்.ஜி.ஆரும் பிரபாகரனும் தனியே பதினைந்து நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தனர். பிறகு பிரபாகரன் வெளியே வந்தார். எனது காரில் அவரது இல்லத்துக்குத் திரும்பினோம். அப்போது பிரபாகரன் என்னிடம், “முதல்வரிடம் பண உதவி கேட்டேன்” என்று கூறினார்.

ஒரு வாரத்தில் பொதுத்துறைச் செயலரிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. “விடுதலைப் புலிகள் அமைப்புக்குப் பொறுப்பானவர்கள் யாரையாவது அழைத்து வாருங்கள்” என்று உத்தரவிட்டார். நான் கிட்டுவையும் அவருடன் இன்னொருவரையும் அழைத்துச் சென்றேன். நான்கு கோடி ரூபாய்க்கான காசோலையை அவர்களிடம் பொதுத்துறைச் செயலாளர் வழங்கினார். நான் அதைப் புகைப்படம் எடுத்தேன். பின்னர் பொதுத்துறைச் செயலர் அந்தப் புகைப்படத்தின் அசல், நகல் இரண்டையும் என்னிடமிருந்து வாங்கி வைத்துக் கொண்டார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசிபலன்கள்-2025



கிரகநிலை

தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், புதன் - களத்திர ஸ்தானத்தில் சனி - அஷ்டம ஸ்தானத்தில் சுக்கிரன், ராகு - தொழில் ஸ்தானத்தில் குரு (வ) - லாப ஸ்தானத்தில் செவ்வாய்(வ) என கிரகநிலை உள்ளது.

கிரகமாற்றங்கள்

05.02.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து புதன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11.02.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் குரு வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 12.02.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து சூரியன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.02.2025 அன்று லாப ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 26.02.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து புதன் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நீங்கள் உயர் மட்டத்தில் உள்ள மனிதர்களிடம் தொடர்பு வைத்திருப்பவர்கள். இந்த மாதம் ராசிநாதன் சூரியன் ரண ருண ரோக ஸ்தானத்தில் புதனுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். தனாதிபதி புதன் சப்தம ஸ்தானத்திற்கு மாற இருக்கிறார். சுபசெலவுகள் அதிகரிக்கும். பயணங்கள் மூலம் வீண் அலைச்சலும், காரிய தாமதமும் உண்டாகும். புதிய நட்புகள் கிடைக்கும். எடுத்த காரியங்கள் கை கூடும். அடுத்தவர் செயல்களுக்கு பொறுப் பேற்காமல் தவிர்ப்பது நல்லது. பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.

தொழில் ஸ்தானத்தில் குரு இருந்தாலும் அது அவருக்கு சம வீடாகும். தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் இருக்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைத்தாலும் செலவும் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். எடுத்த காரியங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும்.

குடும்பத்தில் இருப்பவர்களுடன் இருந்து வந்த மனச் சஞ்சலங்கள் அகலும். கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதங்கள் உண்டாகாமல் தவிர்ப்பது நன்மை தரும். பிள்ளைகளுடன் சகஜமாகப் பேசி வருவது நல்லது. அவர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் ஆதரவுடன் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். பெண்களுக்கு வீண் அலைச்சலும் காரிய தாமதமும் ஏற்படலாம். மற்றவர்களுக்காகப் பொறுப்புக்களை ஏற்பதை தவிர்ப்பது நல்லது.

## தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும்

கலைத்துறையினருக்கு கூடுதல் பணிச்சுமையை ஏற்க வேண்டி இருக்கும். உங்களது கருத்துக்களைத் தெரிவிக்கும்போது கவனமாக பேசுவது நல்லது. வீண் அலைச்சல், தடை, தாமதம் ஏற்படலாம். கவனம் தேவை. புதிய முயற்சிகளைத் தள்ளி போடுவது நல்லது. அரசியல் துறையினர் மற்றவர்களுக்கு உதவப் போய் வீண் பிரச்சினை உண்டாகலாம்.

வாகனங்களில் செல்லும்போது எச்ச




ரிக்கையாகச் செல்வது நல்லது. மனத் துயரம் நீங்கும். சிற்றின்பச் செலவு அதிகரிக்கும். மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கிச் சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம். கவனமாக இருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகம்:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் குறிக்கோள் இன்றி வேலை செய்ய வேண்டி இருக்கும். உத்தியோகம் தொடர்பான இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் எதிர்பாராத திடீர் செலவு ஏற்படலாம். கணவன்

| | | | |
|---|---|---|---|
| சுக்கி ராகு | | குரு(வ) | செவ்(வ) |
| சனி | ராசி<br>05.02 – புத – கும்<br>11.02 – குரு – வநி<br>12.02 – சூர் – கும்<br>21.02 – செ – வநி<br>26.02 – புத - மீன | | |
| சூரி புதன் | | | |
| | | | கேது |

மனைவிக்கிடையே விட்டு கொடுத்து செல்வது நல்லது.

**பூரம்:** இந்த மாதம் குடும்பத்தினரிடம் பக்குவமாக நடந்து கொள்வது நன்மை தரும். உறவினர்கள், நண்பர்கள் வருகை இருக்கும். கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியைக் கடைபிடிப்பதன் மூலம் எல்லாவற்றிலும் அனுகூலம் உண்டாகும். கோபத்தைக் குறைப்பது நல்லது.

**உத்திரம்1 ஆம் பாதம்:** இந்த மாதம் எதிலும் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. போட்டி, பொறாமை அகலும். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்து அதன் மூலம் நன்மதிப்பு பெறுவீர்கள்.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமையில் சிவனை வில்வ அர்ச்சனை செய்து வணங்க எதிர்ப்புகள் விலகும். மனக் குழப்பம் நீங்கும். கடன் பிரச்சினை குறையும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய், வியாழன் ;

**சந்திராஷ்டம தினங்கள்:** 2, 3.

**அதிஷ்ட தினங்கள்:** 23, 24



கிரகநிலை

இராசியில் கேது - பஞ்சம ஸ்தானத்தில் சூரியன், புதன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி - களத் திர ஸ்தானத்தில் சுக்கிரன், ராகு - பாக்கியஸ்தானத்தில் குரு (வ)- தொழில் ஸ்தானத் தில் செவ்வாய்(வ) என கிரக நிலை உள்ளது.

கிரகமாற்றங்கள்

05.02.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து புதன் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11.02.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் குரு வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 12.02.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து சூரியன் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.02.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 26.02.2025 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து புதன் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நீங்கள் ஆடம்பர வாழ்க்கையில் நாட்ட முடையவர். சிக்கனத்தைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்படுபவர்கள். இந்த மாதம் தனாதிபதி சுக்கிரன் சப்தம ஸ்தானத்தில் உச்சமாக சஞ்சரிப்பதால் பணவரத்து அதிகரிக்கும். மனக் குழப்பம் உண்டாகலாம். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. சொத்து சம்பந்தமான காரியத் தடைகள் விலகும். ராசிநாதன் புதன் சஞ்சாரம் பயணங்கள் மூலம் நன்மையை தரும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்லதாக இருக்கும்.

இராசிநாதனும் தொழில் ஸ்தானாதிபதியுமான புதன் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் நட்பாக சஞ்சாரம் செய்கிறார். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நிலை மாறி முன்னேற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். திறமையான பணியாளர்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயற்பட்டு சாதகமான பலன் காண்பார்கள். சக பணியாளர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

குடும்ப அதிபதி சுக்கிரனின் உச்ச பலத்தால் குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும். உங்களது கருத்துக்களுக்கு மாற்றுக் கருத்துக்கள் இருக்காது. கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி அதிகரிக்கும். குழந்தைகளின் செயற்பாடுகள் மனத்திருப்தியை தரும். வேடிக்கை விநோதங்களில் [illegible] சூழ்நிலை [illegible] தங்கு தடையின்றி நடை பெறும்.

## புதிய நண்பர்கள் கிடைப்பார்கள்

பெண்களுக்குத் தொலைதூர தகவல்கள் மன மகிழ்ச்சியை தருவதாக இருக்கும். பயணங்களால் சாதகமான பலன் கிடைக்கும். திருமணம் சம்பந்தமான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கலைத்துறையினருக்குக் கண் நோய் ஏற்படலாம். வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம். தொழிலில் திடீர் போட்டி இருக்கும். வீண் வார்த்தைகளைப் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.




அரசியல் துறையினருக்கு அதிகம் பணியாற்றுவதால் உடல் சோர்வடைய நேரலாம். மேலிடத்திடம் வீண் பேச்சுக்களைத் தவிர்ப்பது நல்லீது. ஏதாவது வேண்டாத பிரச்சினை தலை தூக்கலாம். யாரிடமும் வீண் சண்டையைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விடயங்கள் சாதகமாக முடியும். திறமை வெளிப்படும்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் உடல் ஆரோக்கியம் உண் [illegible] ரத்து திருப்தி தரும். [illegible] செல்ல நேரிடும். விருந்து

| | | | |
|---|---|---|---|
| சுக்கி ராகு | | குரு(வ) | செவ்(வ) |
| சனி | ராசி<br>05.02 – புத – கும்<br>11.02 – குரு – வநி<br>12.02 – சூர் – கும்<br>21.02 – செ – வநி<br>26.02 – புத - மீன | | |
| சூரி புதன் | | | |
| | | | கேது |

நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை வரும். முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். சிலர் புதிய வாகனம் வாங்குவார்கள்.

**அஸ்தம்:** இந்த மாதம் தொழில் வியாபாரம் மந்தநிலை மாறும். சாதுரியமான பேச்சின் மூலம் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். விலகிச் சென்ற வாடிக்கையாளர்கள் மீண்டும் வருவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமான செயல்கள் மூலம் காரிய வெற்றி காண்பார்கள்.

**சித்திரை 1, 2ஆம் பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். மனவருத்தத்துடன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேர்வார்கள். கணவன் மனைவிக்கிடையே சந்தோஷம் நீடிக்கும். பிள்ளைகளுக்குத் தேவையான ஆடை, அணிகலன்களை வாங்கி கொடுத்து மகிழ்வீர்கள்.

**பரிகாரம்:** பெருமாளுக்குத் துளசியை அர்ப்பணித்து வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும். குறைகள் நீங்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 4, 5

**அதிஷ்ட தினங்கள்:** 25, 26

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி.தெய்வானை செல்லத்துரை



இடைக்காடு அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.தெய்வானை செல்லத்துரை அவர்கள் கடந்த சனிக்கிழமை (01.02.2025) அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை-பாறுபதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற காசிலிங்கம்-நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரை (ஓய்வு நிலை அஞ்சல் அத்தியட்சகர்-முல்லைத்தீவு மாவட்டம்) அவர்களின் அன்பு மனைவியும், நாகநந்தினி (கனடா), செல்வவேல் (உதவி அதிபர், யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), இரத்தினவேல் (Quantity Surveyor - கனடா), நாகசொரூபி (இடைக்காடு), செந்தில்வேல் (Quantity Surveyor - நெதர்லாந்து), நாகநளினி (Quantity Surveyor - அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்கினேஸ்வரன் (கனடா), சுதானி (ஆசிரியர்-யா/கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம்), கிருத்திகா (கனடா), குணாகரன் (அதிபர் யா/நவக்கிரி அ.மி.த.க பாடசாலை), லாவண்யா (நெதர்லாந்து), நிரஞ்சன் (Quantity Surveyor - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிஷான், விஷாலினி, சரன், ஐதுஷா, அபிசங்கா, சந்தோஷ், மிதுன், சர்வின், ரேணுகாந், கிருஷன், கிருத்திகன், வருண், வைஷாலினி, மாதுமை ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்வு 18.06.1944

உதிர்வு 01.02.2025

(சி-2181)

குளப்பன், இடைக்காடு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்
தொ.பே : 077 210 5354, 077 100 5212

# மரண அறிவித்தல்

## பேராசிரியர் அம்பலம் புஸ்பநாதன்

### (வவுனியாப் பல்கலைக்கழகம்)

வதிரி புஸ்ப இல்லத்தைப் பிறப்பிடமாகவும் அல்வாய் செல்வ மஹாலை வசிப்பிடமாகவும் கொண்ட பேராசிரியர் அம்பலம் புஸ்பநாதன் அவர்கள் 31.01.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம்-மனோன்மணி தம்பதியரின் இளைய புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவானந்தன்-செல்வமலர் தம்பதியரின் மூத்த மருமகனும் விஜிதா (ஓய்வு பெற்ற ஆசிரியை-வ/வவுனியா த.ம.ம.வி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தர்மநாதன், விஜயநாதன் மற்றும் விஜயமலர், தர்மவதி, மோகன் (அதிபர்), வினோதரன் (கணக்காளர்), சுகுணா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் உதயகுமார் (கனடா) மஞ்சுதா மோகன் (ஆசிரியை), சுகிர்தா வினோதரன் (ஆசிரியை), ராதாமலர், சாரதாவதி, செல்வரத்தினம், காலஞ்சென்ற வேலாயுதம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ராதிகா தயாளரூபன், சுரேகா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), செந்தூரன் (பீடாதிபதி-தொழி நுட்பப்பீடம் வவுனியா பல்கலைக்கழகம்), குமரன் (லண்டன்-பொறியியலாளர்), துவாரகன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் கரவெட்டி) ஆகியோரின் சிறிய தந்தையும் வர்ஷன், சிவாம்சன், கவிஷனன், சிவ லக்ஷன் ஆகியோரின் பெரிய தந்தையும் அகிலன் (ஆசிரியர்), ஜெயந்தன், ராஜாராம், மங்கலிக்கா, ரம்பா, அபிரா (ஆசிரியை), விஜயராஜா, ஜேம்ஸ்பொண்ட், எலிஷபெத், கமல் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.02.2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



செல்வமஹால்,
அல்வாய்.

(சி-2182)

தகவல்:
குடும்பத்தினர்
சி.உதயகுமார்- 074 042 9087
மோகன்- 077 977 7818
வினோதரன்- 077 023 7189

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்கும்

## உறுதிபடத் தெரிவித்தார் ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

நாட்டின் அபிவிருத்திப் பணிக்காகப் பொது மக்கள் காணிகள் சுவீகரிக்கப்பட்டால் அவர்களுக்குச் சரியான திட்டங்களை முன்வைத்து அதற்கான இழப்பீட்டை வழங்க வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில், பொது மக்கள் காணி சுவீகரிப்பு, அவர்களின் வாழ்விடங்களை இல்லாது செய்கிறது என எழுந்த குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அபிவிருத்திப் பணிகளுக்காகப் பொது மக்களின் காணிகள் சுவீகரிக்கப் பட்டால் அவர்கள் பாதிக்கும் வகையில் அல்லாமல் சரியான திட்டமிடலை மேற் கொண்டு அதற்கான மாற்றீட்டை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

வடக்கில் சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் அரசு தகுந்த முறைகளைக் கையாளும் என அவர் மேலும் தெரிவித்தார். (சு-நி-8)

# நீரிழிவு விழிப்புணர்வு நடைபயணம்





யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையும் நீரிழிவுக் கழகமும் இணைந்து நடத்திய நீரிழிவு விழிப்புணர்வு நடைபயணம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை நடைபெற்றது. (நி-8-33)

# சீரணி ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் திருவருள் மிகு சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன சமர்ப்பண உத்தமோத்தம த்ரயத் திருஞ்சத்(33) குண்டபஷ மஹா யாக பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்-2025 எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.35 மணி முதல் 10.15 மணிவரையுள்ள சுபவேளையில் இராஜ கோபுரங்களுக்கும் அன்னை ஸ்ரீ நாகபூசணி அம்பாளுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக பெருஞ் சாந்தி விழா வேத ஆகம முறைப்படி சிறப்புற நடைபெற வுள்ளது. நேற்று ஞாயிற்றுக் கிழமை கும்பாபிஷேக கிரிகைகள் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளில் 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (நி)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சர்க்கரைவள்ளிக் கிழங்கு

**Botanical name- Ipomoea batatas**
**Family- Convol vulaceae**
**Engl-Sweet potato**



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சர்க்கரை வள்ளிக்கிழங்கானது போசணைக் கூறுகள் நிறைந்தது. அதிக மருத்துவ குணங்களையும் கொண்டது. சர்க்கரை வள்ளிக் கிழங்கின் நிறத்திற்கான காரணம் அதிலிருக்கும் Anti oxidant மற்றும் Beta corotene , antho cyanine மற்றும் Flavocyanine காணப்படும் வேதியற் பொருட்களே யாகும். இவ் வேதியற்சத்துக்கள் இருதய நோய்கள் மற்றும் புற்று நோயிலிருந்து பாதுகாப்பு அளிக்கக் கூடியது.

குறிப்பாக இதில் உயிர்ச்சத்து A அதிகம் காணப்படுகின்றது. எனவே தோல்களின் ஆரோக்கியம், நோய் எதிர்ப்பு சக்தி என்பவற்றிற்கு அவசியமாகின்றது. இதை விட மக்னீசியம், பொட்டாசியம், உயிர்ச்சத்து C போன்ற சத்துக்களும் காணப்படுகின்றது. Resistant sturch அதாவது மெதுவாக ஜீரணமாகும் மாச்சத்தும் காணப்படுகிறது. இதைச் சாப்பிட்டவுடன் இரத்த சர்க்கரை அளவு எவ்வளவு கூடுகிறது. என்பதை பொறுத்துத் தான் நீரிழிவு நோயாளிகள் சர்க்கரை வள்ளிக் கிழங்கை பயன்படுத்த வேண்டும்.

சர்க்கரை வள்ளிக் கிழங்கின் சர்க்கரை உயர்த்தும் திறன் 63. பொதுவாக நாம் சர்க்கரை உயர்த்தும் திறன் 55 இற்கு கீழுள்ள உணவுக் கூறுகளை பொதுவாக நீரிழிவு நோயாளிக்கு பயன்படுத்த அறிவுரை வழங்கப்படுகிறது. எனினும் வாரம் ஒரு முறை நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தலாம். சர்க்கரை வள்ளிக் கிழங்கை ஏனையோர் பயன்படுத்தும் போது உடலுக்குப் புத்துணர்ச்சியையும் எப்போதும் இளமைத் தோற்றமும் இருக்குமாறு செய்கிறது.

இதில் இருக்கும் கல்சியம், பொஸ்பரஸ் சத்துக்கள் எலும்புகள் வலுப்பெற உதவுகின்றன. கண்பார்வை மேம்பட



பெரிதும் உதவுகிறது. கொலஸ்ரோல் பிரச்சினை ஏற்படாமல் தடுக்க இதனைச் சாப்பிடலாம். தைரொக்சின் சுரப்பையும் சீராக்க உதவுகிறது. நீரிழிவு நோயாளிகளுக்கு அடிக்கடி சளி இருமல் ஏற்படும். அவர்களுக்கு சர்க்கரை வள்ளிக் கிழங்கை அவித்துக் கொடுக்கலாம். இதில் உயிர்ச்சத்து C காணப்படுகின்றமை இதற்கு ஓர் காரணமாகும். இக் கிழங்கில் காணப்படும் உயிர்ச்சத்து B6 ஆனது இரத்த சோகை ஏற்படாமல் தடுக்கக் கூடியது. ஆகவே இரத்தச் சோகை அல்லது பாண்டுநோய் உள்ளவர்கள் இதனைச் சாப்பிடுவதால் இரத்த விருத்தி செய்யக் கூடியதாகவும் இருக்கும். அதாவது இரத்தத்தில் ஈமோகுளோபினை அதிகரிக்கச் செய்யும் சத்துக்கள் உண்டு.

அத்துடன் குழந்தைகளின் மூளை வளர்ச்சியையும் தூண்டக் கூடியது. ஞாபக சக்தியையும் அதிகரிக்கக் கூடியது. இக் கிழங்கில் நார்ச்சத்து அதிகமாகக் காணப்படுவதால் மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கக் கூடியதாகவும் இருக்கும். அத்துடன் செரிமானப் பிரச்சினைகள் ஏற்படாமல் குடலின் இயக்கத்தை சீராகப் பேணக் கூடியதாகவும் இருக்கும்.

பொது வாக இக் கிழங்கில் காணப் படும் Anti oxidant வேதியற் சத்துக்கள், குடற்புற்று நோய், மார்பகப் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் போன்றன ஏற்படாமல் தடுக்கும் ஆற்றலுண்டு.

இதிலிருக்கும் சத்துக்கள் குடற்புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் போன்றன ஏற்படாமல் தடுக்கும் ஆற்றல் உண்டு.

இதிலிருக்கும் சத்துக்கள் ரத்தத்திலுள்ள கழிவுகளை அகற்றி இரத்தத்தை தூய்மைப்படுத்தும் தன்மை இருந்தாலும் தோல் நோய்கள் ஏற்படாமல் சருமமும் பளபளப்பாக இருக்கும். சர்க்கரை வள்ளிக் கிழங்கானது பொதுவாக வெப்ப மண்டலங்களில் வளரக்கூடிய கொடி வகையாகும்.

இக் கிழங்கை சமைத்தும் சாப்பிடலாம். வேக வைத்தும் சாப்பிடலாம். ஒரு சாதாரண அளவு சர்க்கரை வள்ளிக் கிழங்கானது நாம் அன்றாடம் எடுக்க வேண்டிய உயிர்ச்சத்து A, C, மக்னீசியம், E ஆகியவற்றில் பாதி அளவைக் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

இக் கிழங்கை ஒன்றாக அவித்து சாப்பிட்டு வரும் போது குடற்புண்ணை ஆற்றும் தன்மையை ஏற்படுத்தும். இது கூடுதலாக கார்த்திகை, மார்கழி மாதங்களில் அதிகம் கிடைக்க கூடியதாக இருக்கும். பொதுவாக நிலத்திற்குக் கீழ் விளையும் கிழங்குகளில் நார்ச்சத்து மிக மிக குறைவு.

ஆனால் மாறாக சர்க்கரை வள்ளிக் கிழங்கில் Dietary Fibre எனும் நார்ச்சத்து அதிகமாகக் காணப்படும். அதாவது Soluble fibre, insolubele fibre எனும் இரண்டு வகையான நார்ச்சத்துகளும் அதிகமாகவே காணப்படுகிறது.

இது குடலில் நன்மை தரும் பக்றீரியாக்களின் வளர்ச்சியைத் தூண்டி குடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் குடல் சார்ந்த பிரச்சினைகளான குடல் அழற்சி, கழிச்சல் போன்றன வராமலும் தடுக்க கூடியதாக இருக்கும்.

சர்க்கரை வள்ளிக் கிழங்கில் காணப்படும் மக்னீசியம் சத்தானது மன அழுத்தத்திற்கு காரணமான cortisol ஹோமோனை குறைத்து மன அழுத்தம் உண்டாவதையும் குறைக்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வளவு மருத்துவக் குணங்கள் நிறைந்த சர்க்கரை வள்ளிக் கிழங்கை நீங்கள் அன்றாடம் பயன்படுத்தி பலன் பெற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் புதிய தொழிற்பேட்டைகள் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை, பரந்தன் மற்றும் மாங்குளம் பகுதிகளில் புதிய தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கின் இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தில் காங்கேசன் துறை, பரந்தன் மற்றும் மாங்குளம் பகுதிகளில் புதிய தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத் திட்டத்தில் புலம்பெயர் உறவுகள் முதலீடு செய்ய வாய்ப்பளிக்கப்படும்.

எனவே புலம்பெயர் அமைப்புகள் இத் திட்டத்தில் பங்கு கொள்ள முன்வர வேண்டும்.

இத் திட்டத்தினூடாக வடக்கில் பாரிய வளர்ச்சியானது எதிர்பார்க்கப்படுவதுடன் பல ஆயிரம் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பையும் வழங்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (சு-நி-8)

# கால்நடைகளின் நடமாட்டத்தால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு



(தருமபுரம்)

ஏ-35 பிரதான வீதியில் கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளதாக வாகன சாரதிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் புளியம்பொக்கணை, தருமபுரம், விசுவமடு, உடையார்கட்டு ஆகிய பகுதிகளில் பிரதான வீதிகளில் கால்நடைகள் நடமாடி திரிவது மற்றும் வீதிகளில் படுத்துறங்குவது விபத்துக்கான காரணமாகிறது.

இதனால் சாரதிகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே கால்நடைகளின் உரிமையாளர்கள் இது தொடர்பில் கவனத்துடன் செயற்பட வேண்டுமென சாரதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-8-316)

# ஜெனிவா செல்லும் சிறப்புக்குழு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான இராஜதந்திர சிறப்புக் குழு எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜெனிவாவுக்கு விஜயம் செய்கிறது.

இலங்கைக்கு எதிரான போர் குற்றச்சாட்டுகள் குறித்து விசேட அறிக்கையை இலங்கை தரப்பு சமர்ப்பிக்க உள்ளதுடன்,

சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க புதிய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பான நீண்ட தெளிவுபடுத்தலை முன்வைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள நிலையில், மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்த தீர்மானத்தின் 51/1 நகல்வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கவும், இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற போர் குற்றங்கள் குறித்து ஆதாரங்களை சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் தீர்மானத்தை நிராகரிக்கவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இறுதி அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் நகல்வடிவை நிராகரிப்பதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி கூடிய அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.


இதேவேளை உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக உறுதியளித்துள்ளது. ஆனால் ஜெனிவா தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் முன்னெடுப்புகளுக்கு சர்தேசத்தின் ஒத்துழைப்புகளை ஜெனிவாவில் கோரவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பிரதிபலிக்கும் வகையிலேயே சிறப்பறிக்கை அமையவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டிருந்தார். (நி-8)

## ஜனவரியில் மட்டும்

# 4,943 டெங்கு நோயாளர்கள்




(கொழும்பு)

ஜனவரி மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் மட்டும் 4,943 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் தான் அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 1,382 பேர், கம்பஹா மாவட்டத்தில் 764 பேர், காலி மாவட்டத்தில் 315 டெங்கு நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி-8)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு கைதிகளை பார்வையிட வாய்ப்பு

(கொழும்பு)

சுதந்திர தினத்தையொட்டி, சிறைக் கைதிகளை பார்வையிடுவதற்கு பார்வையாளர்களுக்குச் சிறப்பு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாளை 4 ஆம் திகதி கைதிகளின் உறவினர்களால் கொண்டுவரப்பட்ட உணவு மற்றும் சுகாதாரப் பொருட்கள் ஒரு கைதிக்கு போதுமான அளவு வழங்குவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (நி-8)

# கடலாமையுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி நாச்சிக்குடா கடற்கரையில் கடலாமையுடன் நபர் ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாச்சிக்குடாப் பகுதியைச் சேர்ந்த 35 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக முழங்காவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8-316)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

(3554)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615 6719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு
077 839 3974



# மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 20.02.2025 ஆம் திகதி வரை மீட்டெடுக்கப்படாத /புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 21.02.2025 மற்றும் 22.02.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/ பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/பல்கலைக்கழகம், யாழ்/ கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல : 021-222 2601 : 021-222 2602


(c- 2180)

Pride of the Nation


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# குளிரில் உறைந்த நயாகரா நீர்வீழ்ச்சி



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நிலவி வரும் கடுங்குளிர் காரண மாக உலகப் புகழ் பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சி பாய்ந்து செல்லும் இடங்களில் பனி படர்ந்து ரம்மியமாக காட்சி அளிக்கிறது.

வெள்ளைப் போர்வை போர்த்தியது போன்று காணப்படும் நயாகரா அருவியின் அழகை நேரில் காண அமெரிக்கா மற்றும் கனடாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் படையெடுத்து வருகின்றனர்.

உறைபனிக்கு மத்தியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டும் காட்சிகள் வெளியாகி கண்களை கவர்ந்து வருகிறது.

கடுமையான குளிரால் நீரின் சில பகுதிகள் உறைந்தும் பனிப்பொழிவால் மூடப்பட்டும் காட்சியளிக்கின்றன.

மேற்பகுதி உறைந்த நிலையில் காணப்பட்டாலும் நீர் முழுமையாக உறையவில்லை. எனவே அடிப்பகுதியில் நீரோட்டம் நடக்கிறது. (நி-8)

உக்ரைன் எல்லையிலிருந்து

# வடகொரிய வீரர்களை வெளியேற்றிய ரஷ்யா



(மொஸ்கோ)

உக்ரைன் மீதான ரஷ்யா போரில் உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப்பிய நாடுகள் செயற்படுகின்றன. அந்த நாடுகள் ஆயுதம் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்குகின்றன.

அதேபோல் நட்பு நாடான வடகொரியா 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களை ரஷ்யாவுக்கு அனுப்பியது. ரஷ்யா அந்த வீரர்களை உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள குர்ஸ்க் பிராந்திய எல்லை அருகே நிறுத்தியது.

ஆனால் உக்ரைனின் தாக்குதல் மற்றும் மோசமான வானிலையை அவர்களால் தாக்குப்பிடித்து நிற்க முடியவில்லை. இதனால் சுமார் 4 ஆயிரம் வட கொரிய வீரர்கள் காயம் அடைந்தனர். எனவே குர்ஸ்க் எல்லையில் இருந்து அவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டு உள்ளனர்.

உக்ரைனின் சரமாரி தாக்குதலில் பலர் இறந்ததால் வடகொரிய வீரர்களை வெளியேற்ற வேண்டிய கட்டாயம் ரஷ்யாவுக்கு ஏற்பட்டு இருக்கலாம் என உக்ரைன் இராணுவ செய்தித் தொடர்பாளர் அலெக்சாண்டர் கிண்ட்ராடென்கோ தெரிவித்துள்ளார். (நி-8)

# அமெரிக்க பெ

# 25 சதவீத வரி வி



(ஒட்டாவா) —

## அமெரிக்காவில் இ

## செய்யப்படும் பொரு

## சதவீத வரி விதித்து

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த மாதம் பதவியேற்றார். பதவியேற்றது முதல் ட்ரம்ப் அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்.

குறிப்பாக உலக சுகாதார அமைப்பில் இருந்து வெளியேறுதல், பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுதல், அமெரிக்காவின் தென்


பகுதியில் மெக்சிகோ
லைகளில் அ
நிலையை பிரகடனப்ப
தல் உட்பட பல்வேறு
வடிக்கைகளை
னெடுத்து வருகின்
மேலும், பல்வேறு நா
மீதும் டொனால்ட்
அதிரடி வரி விதிப்பி
பட்டு வருகிறார்.

அந்த வகையில் க
மெக்சிகோ ஆகிய
களில் இருந்து இறக்
செய்யப்படும் பொ

# அமெரிக்காவை

# தக்க பதி

## டொனால்



(வோஷிங்டன்)

அமெரிக்காவைத் தாக்க நினைப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றதில் இருந்து டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

அந்தவகையில் சோமாலியாவில் குகைகளில் பதுங்கி இருக்கும்

ஐ.எஎ
மீது
அமெ
ட்ரம்ப
அமெ
ஆரம்

இ
சமூக
டுள்ள
வது.
கொ
நமது
வருக
வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...பொருட்களுக்கு ...விதித்தது கனடா!

## ...இருந்து இறக்குமதி ...ருட்களுக்கு கனடா 25 ...துள்ளது.



...கோ எல் ...அவசர ...ஏப்படுத்து ...வறு நட ...முன் ...ின்றார். ...நாடுகள் ...ட்ரம்ப் ...பில் ஈடு

...கனடா, ...ய நாடு ...றக்குமதி ...பொருட்க

ளுக்கு 25 சதவீதமும், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதமும் வரி விதித்து ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவு உடனடியாக அமுலுக்கு வருகிறது.

இந்நிலையில் அமெரிக்கா விதித்த இறக்குமதி வரிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் கனடாவும் வரி விதித்துள்ளது. அதன்படி, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று கனடா அறிவித்துள்ளது.

இந்த இறக்குமதி வரி நேற்று முதல் அமுல்படுத்தப்படும் என்றும் கனடா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ...வைத் தாக்க நினைப்பவர்களுக்கு ...லடி கொடுக்கப்படும்

## ...ல்ட் ட்ரம்ப் எச்சரிக்கை

...எஸ். பயங்கரவாதிகள் குழுவினர் ...வான்வழித் தாக்குதல் நடத்த ...மெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ...ம்ப் உத்தரவிட்டுள்ளார். அதன்படி ...மெரிக்கா வான்வழித் தாக்குதலை ...ரம்பித்துள்ளது.

இது குறித்து டொனால்ட் ட்ரம்ப் ...க வலைத்தளத்தில் வெளியிட் ...ள அறிக்கையில் கூறியிருப்பதா ...து, "குகைகளில் பதுங்கியிருந்த ...லையாளிகள் அமெரிக்காவையும், ...து நட்பு நாடுகளையும் அச்சுறுத்தி ...கின்றனர். அவர்கள் மீது வான் ...ழித் தாக்குதல் நடத்த உத்தரவிட்டுள்ளேன்.

எந்த வகையிலும் பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்காமல், மேலும் பல பயங்கரவாதிகளையும் மற்றும் குகைகளையும் அழித்துள்ளோம்.


அமெரிக்காவைத் தாக்க நினைப்பவர்கள் யாராக இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து கொலை செய்வோம்" இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து, சோமாலியா ஜனாதிபதி ஹசன் ஷேக் முகமது கூறியதாவது, "பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதில் சோமாலியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையில் வலுவான உறவு இருக்கின்றது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையின் கீழ், சர்வதேச பயங்கரவாதிகளுக்கு எதிராக தொடரும் தாக்குதல்களை வரவேற்கிறோம்" இவ்வாறு ஹசன் ஷேக் முகமது தெரிவித்துள்ளார். (நி-8)

# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

## 6 பேர் உயிரிழப்பு



(கீவ்)

ரஷ்ய இராணுவம் உக்ரைனின் பொல்டாவா நகரத்தில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் கட்டட இடிபாடுகளில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர். மேலும் 13 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து இடிந்து விழுந்த கட்டடத்திலிருந்து சுமார் 22 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

அதேபோல் உக்ரைன் இராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்ட ட்ரோன் இடிபாடுகளில் விழுந்ததில் 60 வயது பெண் ஒருவர் உயிரிழந்தார். இந்தத் தாக்குதலில் நேற்று மட்டும் 6 பேர் கொல்லப்பட்டனர்.

உக்ரைன் இராணுவமும் பதிலுக்கு ரஷ்யா மீது ட்ரோன் தாக்குதல் நடத்தியது. ரஷ்ய வான் பாதுகாப்புப் படையினர் 9 ட்ரோன்களை இடைமறித்து தாக்கி அழித்தனர். (நி-8)

# சூடானில் கலவரம்!

- ❖54 பொதுமக்கள் உயிரிழப்பு
- ❖150 பேர் படுகாயம்



(கார்ட்டும்)

ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. அதனை எதிர்த்து துணை இராணுவத்தினர் போராடி வருகிறார்கள். இதனால் இருதரப்புக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது.

இந்த உள்நாட்டுக் கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில், சூடானின் ஆம்டர்மேன் பகுதியில் உள்ள திறந்தவெளி மார்க்கெட் மீது துணை இராணுவத்தினர் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 54 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர்.

மேலும் 150 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 40 ஆயிரம் ஏக்கரில் தெங்குப் பயிர்ச் செய்கை

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கில் 40 ஆயிரம் ஏக்கரில் தெங்குப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய தேங்காய்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய அரசாங்கம் ஆக்கபூர்வமான செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் காலத்தில் வடக்கில் 40 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் தெங்கு பயிர்ச்செய்கையை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (சு-நி-8)

# முட்டை, கோழி இறைச்சி விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சந்தையில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் சில்லறை விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி ஒரு முட்டையின் விலை ரூ.26 முதல் 30 வரையிலும் கோழி இறைச்சி கிலோகிராம் ஒன்றின் விலை ரூ.650 முதல் 850 வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருவதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முட்டை மற்றும் கோழி உற்பத்தி அதிகரித்துள்ளதாலும் தேவைகள் குறைந்துள்ளதாலும் விலைகளில் வீழ்ச்சி அடைந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சிறப்பு அங்காடிகளில் பத்து முட்டைகள் கொண்ட ஒரு பொதி ரூ.500 முதல் 520 வரை விற்கப்படுவதாகவும் நுகர்வோர் தெரிவித்தனர்.

அத்தோடு, கோழி இறைச்சி 1 கிலோகிராம் 600 ரூபாய் மொத்த விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது. (நி-8)

# நாட்டை வந்தடைந்த வெளிநாட்டு கப்பல்கள்

(கொழும்பு)

பங்களாதேஷ், இந்தோனேஷியா மற்றும் பாகிஸ்தான் நாட்டு கடற்படை கப்பல்கள் மூன்று அடுத்தடுத்து கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

உத்தியோகபூர்வ விஜயமாக இக்கப்பல்கள் வருகை தந்துள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 800 | 500 | 450 | 650-800 | 800 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 160 | 145 | 200 |
| பச்சைமிளகாய் | 1200 | 1100 | 1000 | 800-850 | 1000 |
| தக்காளி | 350 | 220 | 250 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 220 | 200 | 200 |
| கோவா | 350 | 280 | 200 | 300 | 400 |
| கரட் | 450 | 700 | 700 | 600 | 800 |
| பூசணி | 120 | 120 | 150 | 80-120 | 200 |
| புடோல் | 250 | 200 | 200 | 250 | 300 |
| வாழைக்காய் | 200 | 150 | 150 | 100-170 | 250 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 300 | 200-400 | 600 |
| பெரிய வெங்காயம் | 220 | 250 | 250 | 150 | 200 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 500-600 | 600 |
| வெண்டைக்காய் | 350 | 400 | 250 | 350 | 600 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 800 | 700 | 500 | 800-900 | 800 |
| லீக்ஸ் | 350 | 400 | 350 | 350 | 480 |
| பீற்றூட் | 550 | 400 | 400 | 400 | 500 |
| கறிமிளகாய் | 1200 | 900 | 600 | 850 | 1000 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 1400 | 2000 | 2400 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 750 | 400 | 300 | 600 | 600 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 120 | 50-70 | 200 |
| தேசிக்காய் | 250 | 250 | 250 | 150-200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 260 | 180 | 150-220 | 180-230 |
| இராசவள்ளி | 500 | 500 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 400 | 300 | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 250 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 100 | 200 |

# இராசிபலன்

03.02.2025
தை 21 திங்கட்கிழமை
பஞ்சமி முற்பகல் 10.23 மணிவரை

ரேவதி பின்னிரவு 2.35 மணிவரை
சுபநேரம் 12.35-2.05 மணிவரை
இராகுகாலம் 8.05-9.35 மணிவரை

சஷ்டி விரதம்
சந்திராஷ்டமம் -
பூரம், உத்தரம்

வளவன்



மேஷம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், மனச் சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.



கடகம்

விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.



துலாம்

கடன் பிரச்சினைகளை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள் நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.



மகரம்

தொழில் ரீதியாக ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உற்சாகமான நாள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.



ரிஷபம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பணவரவு திருப்தி தரும் வகையில் அமையும்.



சிம்மம்

தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், மனக்குழப்பம் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.



விருச்சிகம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்தினர்களின் வருகையுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.



கும்பம்

குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், செல்வநிலை உயரும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், உற்சாகமான நாள்.



மிதுனம்

மனநிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், உற்சாகமான நாள்.



கன்னி

கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.



தனுசு

பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செய் தொழிலில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



மீனம்

வழிபாடு ஆனந்தம் தரும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

எந்தப் பொறுப்பில் இருந்தாலும் அதற்கு பயிற்சி அவசியம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காரைநகர் இறங்குதுறை விரைவில் புனரமைப்பு

## யாழில் ஜனாதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**காரைநகர் இறங்குதுறை இந்திய அரசின் நிதி உதவியில் விரைவில் புனரமைக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீவகக் கடல் போக்குவரத்து தொடர்பிலும் இறங்குதுறைகள் புனரமைப்பு தொடர்பிலும் அதிகாரிகளினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காரைநகர் இறங்குதுறை நீண்ட காலமாகப் புனரமைக்காமல் காணப்படுகின்றது.

இந்த இறங்கு துறையினை இந்திய அரசின் நிதியுதவியுடன் புனரமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. மிக விரைவில் காரைநகர் இறங்குதுறை புனரமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (க-நி-8)

# 88 தேசிய பாடசாலைகளில் அதிபர்கள் பற்றாக்குறை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அதிபர் சேவை தரம் ஒன்றுக்கான பற்றாக் குறை நிலவுவதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டிலுள்ள 88 தேசிய பாடசாலைகளில் அதிபர் சேவை தரம் ஒன்றுக்கான பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தகுதி வாய்ந்த அதிபர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான, நேர்முகத் தேர்வு எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை இசுருபாயவில் இடம்பெறவுள்ளது. (நி-8)

# உப்பு விலை உயர வாய்ப்பு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதி செய்வதில் ஏற்படும் செலவுகள் அதிகரித்துள்ளதால் இம்மாதம் உப்பின் விலையும் அதிகரிக்கக் கூடும் என அம்பாந்தோட்டை உப்பு நிறுவனத் தலைவர் டி.கே.நந்தன திலக தெரிவித்துள்ளார்.

அதற்கமைய 400 கிராம் உப்பு பக்கெட்டின் விலை 120 ரூபாவாகவும் ஒரு கிலோ கிராம் உப்பு பக்கெட்டின் விலை 180 ரூபாவாகவும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்திய சீரற்ற கால நிலை காரணமாக உள்ளூர் உப்பளங்கள் சேதமடைந்ததைத் தொடர்ந்து, இந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதி செய்வதற்கு இரண்டு இறக்குமதியாளர்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியது.

அதற்கமைய இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1485 மெற்றிக் தொன் முதல் தொகுதி உப்பு கடந்த ஜனவரி 27ஆம் திகதி நாட்டை வந்தடைந்தது. (நி-8)

# வைரஸ் தாக்கத்தால் பன்றிகளை இழந்த பண்ணையாளர்



(தருமபுரம்)

கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்தில் பன்றி பண்ணையில் இருந்த அனைத்து பன்றிகளும் வைரஸ் தாக்கம் காரணமாக இறந்து விட்டதாக பண்ணை உரிமையாளர் கவலை தெரிவித்துள்ளார்.

பல இலட்சங்கள் முதலீடு செய்து பன்றி பண்ணையை நடத்தி வந்த நிலையில் தற்போது நாடளாவிய ரீதியில் பரவிவரும் வைரஸ் நோய்த் தாக்கம் காரணமாக தங்கள் பண்ணையில் உள்ள அனைத்துப் பன்றிகளும் இறந்துவிட்டதாக தெரிவித்துள்ள அவர் இதன் மூலம் 75 இலட்சத்திற்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தன்னுடைய பண்ணையில் உள்ள 150 வரையான பெரிய பன்றிகளும், 100 இற்கு மேற்பட்ட பன்றி குட்டிகளும் இறந்துவிட்டதாக தெரிவித்துள்ள அவர்.

இந்த வைரஸ் தாக்கம் ஏற்பட்டவுடன் பன்றி ஒரு நாள் உணவு உட்கொள்ளாது இருக்கும், மறுநாள் நடுங்க தொடங்கும். இதனைத் தொடர்ந்து அவை இறந்துவிடும். அதாவது நோய்த் தாக்கம் ஏற்பட்டு இரண்டு நாட்களுக்குள் பன்றிகள் இறந்துவிடுகின்றன எனத் தெரிவித்தார். (நி-8-316)

# வருடாந்தம் 2000 பேர் தொழுநோயால் பாதிப்பு

## தேசிய தொழுநோய் ஒழிப்பு இயக்கம்

(கொழும்பு)

நாட்டில் வருடாந்தம் சுமார் இரண்டாயிரம் பேர் வரை தொழுநோயினால் பாதிக்கப்படுவதாகவும் தொழுநோயாளர்களை அடையாளம் காண்பதற்கான செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தேசிய தொழுநோய் ஒழிப்பு இயக்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் நிருபா பல்லேவத்த குறிப்பிட்டுள்ளார்.

தொழுநோயாளர்களில் 12 சதவீதமானோர் 15 வயதுக்குட்பட்டவர்கள் என தரவுகள் தெரிவிக்கின்றன.

குறித்த தொழுநோயாளர்களில் 6 வீதமானவர்களுக்கு உடல் அவயவங்களை இழக்க நேரிடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நோயானது சமூகத்தில் தொடர்ந்தும் பரவி வரும் ஒரு தீவிர நோயாக உள்ளது.

நோயாளர்களை விரைவில் அடையாளம் கண்டு சிகிச்சையளிப்பதன் ஊடாக இந்த நோய் பரவலை தடுப்பதற்கு இயலுமானதாக இருக்கும்.

இது தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும்.

இதனூடாக தொழுநோய் தொடர்பான தவறான அபிப்பிராயங்களை இல்லாமல் செய்வதற்கும், நோயாளர்களுக்கு உரிய வகையில் சிகிச்சையளிப்பதற்கும் இலகுவானதாக இருக்கும் எனவும் வைத்தியர் நிருபா பல்லேவத்த தெரிவித்துள்ளார். (நி-8)

# சிக்கன்குனியா பரவும் அபாயம்

## குழந்தை நல மருத்துவர் எச்சரிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் மத்தியில் சிக்கன்குனியா அறிகுறிகளுடன் காய்ச்சல் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

காய்ச்சல், மூட்டுவலி, உடல் வலி, மூக்கைச் சுற்றி கறுப்பு நிறமாற்றம் போன்றவை சிக்கன்குனியாவின் அறிகுறிகளாக இருக்கலாம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதுபோன்ற அறிகுறிகள் தொடர்ந்தால் விரைவில் மருத்துவமனைக்குச் சென்று தேவையான சிகிச்சையைப் பெற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். டெங்குவை பரப்பும் அதே கொசுதான் சிக்கன் குனியாவையும் பரப்புகிறது.

எனவே கொசுக்கள் பெருகும் இடங்களை அழிப்பது மிகவும் அவசியம் என்றும் மருத்துவ நிபுணர் குறிப்பிட்டார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 694





ஐயா! பொன்னியின் செல்வரைப் பற்றியா இவ்வாறெல்லாம் பேசுகிறீர்கள்? அவர் இராஜாங்கத்துக்கு விரோதமாக என்ன சதி செய்தார்?"

"ஓகோ! உனக்கு அது தெரியாது போலிருக்கிறது. இலங்கைக்குப் போர் செய்யப் போவதாகச் சொல்லி விட்டுப் பொன்னியின் செல்வர் போனார். அங்கே நமது வீரப் படைகள் இலங்கைப் படைகளை முறியடித்தன. அந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொண்டு இளவரசர் அருள்மொழிவர்மர், இலங்கைச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொள்ளப் பார்த்தார். இது இராஜாங்கத்துக்கு விரோதமான சதியல்லவா? இதை அறிந்ததும் சக்கரவர்த்தி தமது திருக்குமாரரைச் சிறைப்படுத்திக் கொண்டு வருவதற்குக் கட்டளை அனுப்பினார். இளவரசர் அக்கட்டளையை மீறிக் கடலில் வேண்டுமென்று குதித்துத்தான் இறந்துவிட்டதாகப் பொய்ச் செய்தியைப் பரப்பச் செய்தார்.

பிறகு கரையேறி எங்கேயோ ஒளிந்து, மறைந்திருக்கிறார். இந்த விபரங்கள் உனக்குத் தெரியாதபடியால் அவர் இருக்குமிடத்தை நீ சொல்ல மறுத்தாய் போலும். அப்படிப்பட்ட இராஜாங்க விரோதியை நீ மறைத்து வைக்க முயன்றால், அதுவும் பெரிய குற்றமாகும் ஆகையால், சொல்லிவிடு அம்மா!" என்றார் முதன் மந்திரி.

வானதி இதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் இப்போது பொங்கிப் பீறிக்கொண்டு வெளிவந்தது. பொன்னியின் செல்வரைக் குறித்து முதன் மந்திரி கூறிய அவதூறான வார்த்தைகளை எல்லாம் அவளால் பொறுக்க முடியவில்லை. அந்தச் சாதுப் பெண் வீராவேசமே உருவெடுத்தவள் போலாகிக் கூறினாள், ஐயா! தாங்கள் கூறியது ஒன்றும் உண்மையில்லை. இளவரசர் மீது வீண் அபாண்டம் கூறினீர்கள். இலங்கையில் நமது படைகள் சோர்வடைந்திருந்த காலத்தில் இளவரசர் அங்கே சென்றதினாலேயே உற்சாகம் கொண்டு போராடினார்கள். பொன்னியின் செல்வர்தான் இலங்கையில் நம் வெற்றிக்குக் காரணமானவர் என்பது உலகமறிந்த உண்மை. அவருடைய வீரத்தையும், மற்ற குணாதிசயங்களையும் பார்த்து இலங்கை மக்கள் அவர் மீது அன்பு கொண்டார்கள். போரில் புறமுதுகிட்டோடி ஒளிந்து கொண்ட தங்கள் அரசனுக்குப் பதிலாக இளவரசரைத் தங்கள் அரசனாக்கிக் கொள்ள விரும்பினார்கள். புத்த குருமார்கள் இலங்கைச் சிம்மாசனத்தைப் பொன்னியின் செல்வருக்கு அளித்தார்கள். பொன்னியின் செல்வர் சிம்மாசனம் தமக்கு வேண்டாம் என்று மறுதலித்தார்.

அத்தகைய நேர்மையானவரைக் குறித்துத் தாங்கள் இவ்வளவு அவதூறு சொல்லியிருக்கிறீர்கள். இளவரசர் தந்தையின் கட்டளை என்று அறிந்ததும் தாமே சிறைப்பட்டு நேரே தஞ்சைக்குப் புறப்பட்டு வந்தார். அவர் கடலில் வேண்டுமென்று குதிக்கவில்லை. தம் அருமை சிநேகிதரின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவே குதித்தார். சக்கரவர்த்திக்கு விரோதமாக அவர் சதி செய்யவும் இல்லை. இந்த அபாண்டங்களையெல்லாம் கேட்க என் செவிகள் என்ன துர்பாக்கியம் செய்தனவோ தெரியவில்லை.

அநிருத்தர் இலேசாகச் சிரித்துக்கொண்டே, பெண்ணே! அருள்மொழிவர்மருக்காக நீ இவ்வளவு ஆத்திரமாகப் பரிந்து பேசுவதைக் கேட்பவர்கள் என்ன நினைப்பார்கள் தெரியுமா? நீங்கள் இருவரும் காதலர்கள் என்று நினைப்பார்கள்!" என்றார்.

"ஐயா! தாங்கள் இப்போது கூறியதில் பாதி மட்டும் உண்மை. நான் அவருக்கு என் உள்ளத்தைப் பறிகொடுத்திருப்பது மெய்தான். இதைத் தங்களிடமிருந்து நான் மறைக்க விரும்பவில்லை. ஆனால் அவர் இந்த அநாதைப் பெண்ணுக்குத் தன் உள்ளத்தில் இடங்கொடுத்திருப்பதற்கு நியாயம் இல்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## எண்ணப்படிதான் வாழ்வு



ஒரூரில் ஒரு விறகு வெட்டி இருந்தான். அவன் நாள்தோறும் ஊர் எல்லையில் இருந்து காட்டுக்கு சென்று விறகுகளை வெட்டி அவற்றை ஊர் மக்களிடம் விற்று பிழைப்பு நடத்தி வந்தான்.

ஒரு நாள் அவன் வழக்கமாக விறகு வெட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்கு களைப்பு ஏற்பட்டது. அங்கிருந்த ஒரு மரத்தின் நிழலில் படுத்தான். அந்த மரமானது நினைப்பதையெல்லாம் கொடுக்கும் மந்திர மரம் ஆகும்.

இந்த விஷயம் அவனுக்குத் தெரியாது. அப்பொழுது தென்றல் காற்று சில்லென்று வீசியது. அது அவனுக்கு சுகமாக இருந்தது. இம்மாதிரியான நேரத்தில் ஒரு பஞ்சுமெத்தை இருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும் என்று அவன் மனதில் நினைத்தான். என்ன ஆச்சரியம்!

அடுத்த கணம் அவன் அருகில் ஒரு கட்டிலும் அதில் பஞ்சுமெத்தையும் வந்து சேர்ந்தது. விறகு வெட்டிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. உடனே அவன் அதில் ஏறிப்படுத்தான்.

நாள் முழுவதும் கடினமாக உழைத்ததால் அவனுக்கு உடம்பெல்லாம் வலித்தது. இந்த சமயத் தில் முதுகு, கை, கால் பிடித்து விட இளம் பெண் ஒருத்தி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று மனதில் எண்ணினான். என்ன அதிசயம்!

அடுத்த கணம் அங்கு ஓர் இளம்பெண் தோன்றி அவனுடைய கை கால்களை பிடித்து விட்டுக் கொண்டிருந்தாள். விறகு வெட்டிக்கு ஒன்றுமே புரியவில்லை, அவன் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தான், அவன் ஆச்சரியப்பட்டான். நினைப்பதெல்லாம் நடக்கின்றதே இவ்வளவு சுகங்கள் இருந்தும் வயிற்றுக்கு உணவில்லாமல் பட்டினியாக இருக்கிறோமே! இப்பொழுது அறுசுவை உணவு இருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும் என்று எண்ணினான்.

மறுகணமே தங்கத் தட்டில் அறு சுவை உணவு வந்தது. பல வகை உணவுகள் வந்தன, விறகு வெட்டி அனைத்தையும் வயிறார உண்டான். "உண்ட மயக்கம் தொண்டனுக்கு உண்டு" என்ற பழ மொழிக்கு ஏற்ப விறகு வெட்டிக்கு உறக்கம் வந்தது படுத்தான்.

அவன் மனதில் திடீ ரென்று ஒரு பயம் தோன் றியது. "நாம் காட்டில் தனியாக அல்லவா இருக்கிறோம்?. இப்பொழுது ஒரு சிங்கம் ஒன்று நம் முன் வந்து நம்மை கொன்று விட்டால் என்னவா கும்?" என்று நினைத்தான்.

மறுகணம் அவன் முன்னால் ஒரு சிங்கம் தோன்றி அவனைக் கொன்று விட்டது.

நீதி : நம் எண்ணபடி தான் நம் வாழ்க்கை அமையும். நாம் உயர்ந் தவற்றை நல்லதை எண்ணினால் நம் வாழ் க்கை நல்லதாகவே அமையும். தவறான எண்ணங்களை எண்ணினால் நம் வாழ்க்கை துன்பம் நிறைந்ததாக இருக்கும். எனவே நாம் உயர்ந்தவற்றையே நினைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்களில் தன்மை மேன்மையடையும் போதே ஆசீர்வாதங்கள் நம்மை வந்தடைகின்றன.

~ பாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களை பிரித்துவிட்டீர்களா?

தங்களின் உரிமைக்காகப் போராட்டம் நடத்திய எம் தமிழினத்தின் சமகால நிலைமை எப்படியாகவுள்ளதென்பதை நாம் கூறி யாரும் அறிந்து கொள்ளவேண்டிய தேவையில்லை.

அந்தளவுக்கு நாம் எமது உரிமை விடயத்தில் இருந்து விலகிச் செல்வது தெரிகிறது.

ஆம், இப்போதெல்லாம் எங்களின் உரிமை பற்றி எவரும் கதைப்பதில்லை.

மாறாக, நாம் மட்டான விடயங்களுக்கே அதீத முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம்.

இதற்கு அண்மையில் நடந்த யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தக்க சான்று.

உண்மை. எங்கள் இனம் சார்ந்து – எங்கள் மக்கள் சார்ந்து எத்தனையோ பிரச்சினைகள் இருக்கும்போது, நாம் தனிப்பட்ட விடயங்கள் பற்றிப் பேசுகின்றோம். இதற்கு மேலாக அரச அதிகாரிகள் அமைதியாக இருக்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் நடைபெறுகின்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்பது உறுதி.

அதேநேரம் ஆட்சியாளர்களும் இந்த விடயங்களை மிக நுட்பமாகக் கையாள்கின்றனர்.

அதாவது எங்களை சுதந்திரமாக வாழ விடுங்கள் என்று கேட்டோம். ஆனால் அதனை அவர்கள் நிராகரித்தனர்.

அதிகாரப் பகிர்வையேனும் தாருங்கள் என்றோம். அதற்கும் அவர்கள் தயாரில்லை.

தவிர, இனப் பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டு வரப்பட்ட மாகாண சபை, தேர்தல் இன்றி வாழாவிருக்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ் மக்களின் பிரச்சினைக்குக் காரணம் தமிழ் மக்களும் தமிழ் அரச அதிகாரிகளும் என்பது போன்ற விம்பத்தைக் காட்ட அரசாங்கம் முற்படுவது தெரிகிறது.

இதற்கு நல்ல உதாரணம் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எழுப்பிய கேள்வியாகும்.

ஆம், நாங்கள் அனுப்புகின்ற நிதியை வேலைத் திட்டங்களுக்குப் பயன்படுத்தாமல் ஏன் திருப்பி அனுப்புகிறீர்கள் என அரச அதிகாரிகளிடம் ஜனாதிபதி அநுர கேட்டிருந்தார்.

இங்கு நிதி திருப்பி அனுப்பப்படுகிறது என்பது ஒருபுறமிருக்க, நிதியை ஏன் திருப்பி அனுப்புகிறீர்கள் என்ற கேள்விக்குள் தமிழ் மக்களை நிர்வாக ரீதியாகப் பிரித்து விட்டோம். உங்களுக்கு நிதி ஒதுக்குகிறோம். ஆனால் நீங்கள் அதைச் சரியான முறையில் பயன்படுத்தவில்லை. அது உங்களைப் பொறுத்தது என்பது போல ஜனாதிபதியின் கேள்வி அமைந்துள்ளது.

இங்குதான் உரிமைகள் எதனையும் தராமல், தமிழ் மக்களைக் கைவிட்டது போன்ற நிலைமை தெரிகிறது.

ஆம், சிங்கள மாவட்டம் ஒன்றிலிருந்து நிதி திருப்பப்பட்டிருக்குமாயின் நிதியை திருப்பிய அதிகாரிகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பர்.

ஆனால் எங்கள் விடயத்தில் மட்டும் அரசு அதனைச் செய்யவில்லை எனும்போது, தமிழர்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்ற நிலைப்பாடு அரச தரப்பில் இருக்கிறதோ என்ற சந்தேகம் எழவே செய்கிறது.

# சீனாவுக்கு ட்ரம்ப் விதித்த வரிகளை இலங்கைக்கும் விதித்தால் என்ன செய்வது

## பகிரங்கப்படுத்தப்படாத இலங்கை – சீன ஒப்பந்தம் குறித்து ரணில் காட்டம்

தூய்மையான அரசியல் என்று கூறினாலும், அரசாங்கத்தின் செயல்களும் நடவடிக்கைகளும் தூய்மையானதாக இல்லை என்பது கொள்கலன் விடயத்தில் வெளிச்சத்திற்கு வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீனாவுக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள வரிக் கட்டுப்பாடுகளை, அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் இலங்கைக்கும் விதித்தால் அரசாங்கம் என்ன செய்யும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

தொலைநோக்குடன் சிந்திக்காது பொறுப்பற்ற வகையில் அரசாங்கம் செயற்படுவது நாட்டின் எதிர்காலத்திற்கு சிறப்பாக இருக்காது. சீனாவுடன் இலங்கை மேற்கொண்ட ஒப்பந்தங்கள் பகிரங்கப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் சீனாவுக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள வரிக் கட்டுப்பாடுகளை, அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் இலங்கைக்கும் விதித்தால் அரசாங்கம் என்ன செய்யும். அவ்வாறானதொரு நிலை வந்தால் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து ஜனாதிபதி அநுரவின் அரசாங்கம் இன்னும் சிந்திக்கக் கூட இல்லை.

மக்கள் நிதியை மோசடி செய்தவர்களைக் கைது செய்வதற்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை. ஆனால் அரசியல் பழிவாங்கல் நோக்குடன் அரசாங்கம் செயற்படுவதை ஒரு போதும் ஏற்க முடியாது. பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் போது அரசாங்கம் முன்வைத்த திட்டங்கள், வழங்கிய உறுதிமொழிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அதற்கான ஆரம்ப நிலை முன்னெடுப்புகள் காணப்படவில்லை.

நாடு பொருளாதார ரீதியில் சவால்களை எதிர்கொள்கையில் இரண்டு ஆண்டுகள் கடுமையாகப் போராடி நிலைமையைச் சீராக்கினோம். அதன் பின்னர் பொருளாதார ரீதியிலான ஸ்திரத்தன்மையை நோக்கி நாட்டைக் கொண்டு செல்ல செயற்பட்டோம். ஆனால் நாடு ஸ்திரத்தன்மையுடன்தான் இருக்கிறதா என்பது கேள்விக்குறியே என்றார். (ம-7)

# யுத்த வெற்றிக்காக மகிந்தவை தோளில் சுமந்து திரிய முடியாது

## பிரதியமைச்சர் ஏரங்க விளாசல்

*(கொழும்பு)*

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார் என்பதற்காக மகிந்த ராஜபக்ஷவை தோளில் சுமந்துகொண்டு இருக்க முடியாது. கௌரவம் என்பதொன்று இருக்குமாயின் மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ அரச இல்லத்தில் இருந்து வெளியேற வேண்டும் என இளைஞர் விவகாரப் பிரதியமைச்சர் ஏரங்க குணசேகர தெரிவித்தார்.

கொலன்னாவப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (2) நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரச செலவுகள் இயலுமான வகையில் குறைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பாதுகாப்பு உட்பட செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் தான் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்பட்டு, வழங்கப்பட்ட அரச இல்லங்களை மீளப்பெறுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் நாகரீகமான முறையில் அரச இல்லத்திலிருந்து வெளியேறியுள்ளார்கள். ஆனால் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, சந்திரிக்கா பண்டாரநாயக்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் இன்றும் அரச இல்லங்களில் தான் உள்ளார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யுத்தத்தை முடித்தார் என்பதற்காக அவரைத் தோளில் சுமந்துகொண்டு திரிய முடியாது. அவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளார்கள். தமது பெற்றோரை பிள்ளைகள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும். மகிந்த ராஜபக்ஷவை பார்த்துக் கொள்வதற்கு அவரது மூன்று பிள்ளைகளுக்கும் முடியாவிடின் அவருக்கும், அவரது பாரியாருக்கும் வீடு வழங்கலாம். ஆனால் அவரது மூன்று பிள்ளைகளையும் அரசாங்கத்தால் பராமரிக்க முடியாது என்றார். (ம-7)

# தோல்வி கண்டவர்களே அரசை விமர்சிக்கின்றனர்

## பாதுகாப்பு அமைச்சர் விஜேபால

தோல்வியடைந்த சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் அரசாங்கத்துக்கு எதிராகப் போலியான பிரசாரங்களை முன்னெடுத்துள்ளனர். இதற்காக நாம் ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை.

எமக்கு வழங்கப்பட்ட மக்களாணையின் நோக்கத்தை நாம் ஆழமாகப்புரிந்து கொண்டுள்ளோம். அதற்கேற்பவே நாம் செயற்படுவோம் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் அந்த மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இதனை நாம் கட்டம் கட்டமாக நிறைவேற்றுவோம். ஏழ்மை நிலையில் இருந்து இந்த மக்களை மீட்க வேண்டும். அவர்களுக்கு வளமான வாழ்க்கையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இந்தப் பகுதியில் காட்டு யானைகள் அச்சுறுத்தல் உள்ளது. அரசாங்கம் என்ற வகையில் யானை - மனித மோதல் தொடர்பில் தீர்வு காணவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தெளிவான திட்டங்கள் எம்மிடம் உள்ளன. மக்கள் பாரிய எதிர்பார்ப்புடனே எம்மிடம் அதிகாரத்தைக் கையளித்தனர். அதனை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்றார். (ம-7)

# முறையற்ற வகையில் அபாயகர கொள்கலன்கள் விடுவிப்பு

## அமைச்சரவையே முழுப்பொறுப்பு என்கிறார் நளின் பண்டார எம்.பி

*(கொழும்பு)*

கொழும்புத்துறைமுகத்திலிருந்து எதுவித பரிசோதனைகளுமின்றி அதிக அபாயம் மிக்க கொள்கலன்கள் அரசாங்கத்தின் அனுமதியுடன் விடுவிப்புக்கு அமைச்சரவையே பொறுப்புகூற வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றம் சுமத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிக அபாயம் மிக்க பொருட்களைக் கொண்ட சிவப்பு முத்திரையிடப்பட்ட 300க்கும் மேற்பட்ட கொள்கலன்கள் எவ்வித சோதனையும் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளன.

ஆளுநர் ஒருவரது பெயர் குறிப்பிடப்பட்டாலும் அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கின்றார். அவ்வாறெனில் யாருடைய அனுமதியில் அவை விடுவிக்கப்பட்டன?

அபாயம் மிக்கவை எனக் குறிப்பிடப்பட்டிருந்த கொள்கலன்கள் மாத்திரம் விடுவிக்கப்பட்டுள்ளதன் பின்னணியில் உள்ள சதித்திட்டம் என்ன?

இங்கு தவறு அரசாங்கத்தின் மீதே காணப்படுகிறது. விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் உட்பட முழு அமைச்சரவையும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். அதேபோன்று அவற்றில் காணப்பட்ட பொருட்கள் என்ன என்பதையும் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் பகுதி - II

11

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 765.74 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். 2020 ஆம் ஆண்டு சனத்தொகை கிட்டத்தட்ட 34 643 பேர். 2018 ஆம் பிரதேச சபைத் தேர்தலுக்குப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 26 773 ஆகும்.

இத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), சுயேச்சைக் குழு (IND), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC), தேசிய மக்கள் கட்சி மற்றும் மக்கள் விடுதலைக் கூட்டணி (JVP) ஆகியன போட்டியிட்டன.

கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தல் – 2018
கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | கரைதுறைப்பற்று பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 13 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 13 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 24 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 6,292 | 30.11% | 6 | 9 | - | 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,833 | 13.56% | 3 | - | 3 | - |
| சுயேச்சைக் குழு | 2,636 | 12.61% | 3 | 1 | 2 | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 2,067 | 9.89% | 2 | 1 | 1 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,819 | 8.71% | 2 | 1 | 1 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,686 | 8.07% | 2 | - | 2 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 1,235 | 5.91% | 1 | - | 1 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 985 | 4.71% | 1 | - | 1 | - |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 962 | 4.60% | 1 | - | 1 | - |
| தேசிய மக்கள் கட்சி | 246 | 1.18% | - | - | - | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 135 | 0.65% | - | - | - | - |
| மொத்தம் | 20,896 | 100% | 21 | 12 | 12 | 3 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 20,896 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 370 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 21,266 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 26,773 |

கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தல் – 2018

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | கரிக்கட்டுமூலை வடக்கு | MUL 98, MUL 99, MUL 100 | ITAK | 598 |
| 2 | வட்டாப்பளை | MUL 101, MUL 102 | ITAK | 520 |
| 3 | முல்லை நகரம் | MUL 92, MUL 93, MUL 94, MUL 95, MUL 96, MUL 97, | ITAK | 645 |
| 4 | ஹிஜ்ராபுரம் | MUL 112, MUL 113, MUL 114, MUL 115 | SLMC | 852 |
| 5 | முள்ளியவளை மேற்கு | MUL 103, MUL 104 | ITAK | 657 |
| 6 | முள்ளியவளை கிழக்கு | MUL 105, MUL 106, MUL 107, MUL 108 | ITAK | 437 |
| 7 | தண்ணீரூற்று | MUL 109, MUL 110, MUL 111 | ITAK | 534 |
| 8 | கணுக்கேணி | MUL 116, MUL 117, MUL 118 | TULF | 369 |
| 9 | முல்லையூர் | MUL 88, MUL 89, MUL 90, MUL 91 | ITAK | 621 |
| 10 | கரிக்கட்டுமுளை கிழக்கு | MUL 83, MUL 84, MUL 85, MUL 86, MUL 87 | IND | 610 |
| 11 | குமுளமுனை | MUL 119, MUL 120, MUL 121, MUL 122 | ITAK | 610 |
| 12 | கரிக்கட்டுமுளை தெற்கு | MUL 77, MUL 78, MUL 79, MUL 80, MUL 81, MUL 82, | ITAK | 496 |
| 13 | வெலிமட கிழக்கு | எஹெட்டுகஸ்வெவ கிராமம், இடது கிரிஇப்பன்வெவ கிராமம், நவ கஜபாபுர கிராமம், ஜனக்கபுர கிராமம், நிகவேவா இடது கிராமம் (பகுதி) | SLPP | 1522 |

## 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் - வவுனியா மாவட்டம்

### 01 - வவுனியா மாநகர சபை

வவுனியா மாநகர (2018 ஆம் ஆண்டில் நகர சபையாக இருந்தது) சபையில் மொத்தமாக 11 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் 3 கிராம அலுவலர் பிரிவுகளின் முழுப் பிரதேசமும் 8 கிராம அலுவலர் பிரிவுகளின் பகுதிப் பிரதேசங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதாவது 214G, 214D, 214A , 214E, 214C, 214F, 244D, மற்றும் 244C ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் ஒரு பகுதி வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம் மாநகர சபை 10 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் எட்டு தனி உறுப்பினர் வட்டாரங்களும் இரண்டு இரட்டை உறுப்பினர்கள் வட்டாரங்களும் ஆகும்.

வவுனியா (மா)நகர சபைத் தேர்தல் – 2018

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | தாண்டிக்குளம் | 214Aன் பகுதி, 214Dன் பகுதி | ITAK | 1371 |
| 2 | பட்டாணிச்சி புளியங்குளம் (2 அங்கத்தவர்கள்) | 214B | UNP | 808 |
| 3 | பண்டாரிக்குளம் | 214Eன் பகுதி | ITAK | 453 |
| 4 | வைரவப்புளியங்குளம் | 214Dன் பகுதி | ITAK | 457 |
| 5 | குடியிருப்பு | 214Aன் பகுதி, 214Cன் பகுதி | ITAK | 728 |
| 6 | கடை வீதி | 214 | ITAK | 469 |
| 7 | மூன்று முறிப்பு (2 அங்கத்தவர்) | 214Gன் பகுதி, 214Fன் பகுதி | UNP | 270 |
| 8 | இறம்பைக்குளம் | 244Aன் பகுதி | SLFP | 346 |
| 9 | சின்னபுதுக்குளம் | 244Aன் பகுதி, 244Dன் பகுதி | SLFP | 316 |
| 10 | கோவில்குளம் | 214Gன் பகுதி, 244Cன் பகுதி | ITAK | 495 |

வவுனியா மாநகர சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 21.41 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020 ஆம் ஆண்டு சனத்தொகை கிட்டத்தட்ட 32028 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 20 300 ஆகும்.

2018 ஆம் ஆண்டுத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC), அகில இலங்கை தமிழர் மகா சபை மற்றும் மக்கள் விடுதலைக் கூட்டணி (JVP) ஆகியன போட்டியிட்டன.

### 02 - வவுனியா வடக்கு பிரதேச சபை

வவுனியா வடக்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018
கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | வவுனியா வடக்கு பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 14 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 14 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 26 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 2,794 | 27.98% | 6 | 8 | - | 2 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,870 | 18.73% | 4 | 5 | - | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,370 | 13.72% | 3 | - | 3 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 1,254 | 12.56% | 3 | 1 | 2 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,124 | 11.26% | 3 | - | 3 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 973 | 9.74% | 2 | - | 2 | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 303 | 3.03% | 1 | - | 1 | - |
| ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி | 246 | 2.46% | 1 | - | 1 | - |
| ஸ்ரீலங்கா கொமியூனிஸ்ட் கட்சி | 51 | 0.51% | - | - | - | - |
| மொத்தம் | 9,985 | 100% | 23 | 14 | 12 | 3 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 9,985 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 166 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 10,151 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 12,166 |

வவுனியா வடக்கு பிரதேச சபையில் மொத்தமாக 25 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதில் 24 கிராம அலுவலர் பிரிவுகளின் முழுப் பிரதேசமும் 1 கிராம அலுவலர் பிரிவின் பகுதிப் பிரதேசமும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதாவது நிகவேவா இடது இல 8 கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் உள்ளடங்கியுள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வவு.வில்...

சிகிச்சை பலனின்றி மரணமடைந் துள்ளார்.

இச்சம்பவத்தில் அநுராதபுரம் நிக்கவரெட்டி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய சத்துரங்க ஹேரத் என்ற இளைஞனே பலியாகியுள்ளார். (ம-7,250)

## அக்னியுடன்...

உள்ள அன்னாரது இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக அவரது புகழுடல் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெற்று, மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்தில் அன்னாரது புகழுடல் தகனம் செய்யப்பட்டது.

இறுதி நிகழ்வில் அரசியல்வாதிகள், பொது அமைப்பினர், மத குருமார்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (ம-7,33)

## இலங்கைக்கு...

நிர்மலா சீதாராமன் இந்த வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்ததுடன், அவர் தாக்கல் செய்த 08ஆவது வரவு செலவுத் திட்டம் இதுவாகும்.

இலங்கைக்கு இந்தியாவின் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக 300 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது இலங்கை ரூபாயில் சுமார் 1032 கோடியாகும்.

இலங்கை பொருளாதார மந்த நிலையிலிருந்து மீண்டு வருவதால், அதற்கான ஒதுக்கீடு 245 கோடியிலிருந்து 300 கோடி இந்திய ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கயிறு கட்டிய...

வாறு மாய்த்துக் கொண்டதாக தெரியவருகின்றது.

இது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கடவுச்சீட்டு...

கடியைத் தீர்ப்பதற்கும் நாங்கள் விரைவில் நடவடிக்கை மேற்கொள்வதுடன் தற்போதைய கடவுச்சீட்டு நெருக்கடியானது முன்னைய அரசாங்கத்தினால் உருவானதொன்றாகும்.

அதற்காக ஓய்வு பெற்றுள்ள ஊழியர்களை மீண்டும் தற்காலிக அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளோம் என்றார். (ம-7)

## மகிந்தவை...

அநுராதபுரத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கிராமத்துக்குக் கிராமம் மக்கள் சந்திப்பை ஆரம்பித்து வைத்த தன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய மக்கள் சக்தி பொய் மற்றும் வெறுப்பை மாத்திரம் பிரதான கொள்கையாக முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்தவுடன் 24 மணித்தியாலங்களில் அனைத்தையும் மாற்றியமைப்பதாகக் குறிப்பிட்ட அரசாங்கம் இன்று கடந்த அரசாங்கங்கள் மீது விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கிறது.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களையும் புலம்பெயர் அமைப்புக்களையும் திருப்திப்படுத்துவதற்காகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அரசாங்கம் பழிவாங்குகிறது. ஏனைய ஜனாதிபதிகளுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஒப்பிட முடியாது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அரச இல்லத்திலிருந்து வெளியேறுமாறு ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறார்கள்.

ஆனால் இதுவரையில் மகிந்த ராஜபக்ஷவை அரச இல்லத்தில் இருந்து வெளியேறுமாறு அரசாங்கம் உத்தியோகபூர்வமான கடிதத்தை அனுப்பவில்லை. முடிந்தால் உத்தியோகபூர்வ அறிவிப்பை எழுத்துமூலமாக விடுக்க வேண்டும் என்ற சவாலை அரசாங்கத்திடம் முன்வைக்கிறேன் என்றார். (ம-7)

## ஓய்வூதியத்தை...

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நீக்குவதற்கான முன்மொழிவை நாங்கள் முன்வைக்கிறோம்.

இதற்குப் பொதுமக்களின் எதிர்ப்பும் இல்லாமல் இல்லை, அரசாங்கம் அதற்கேற்ப செயற்படும் என்று நம்புகிறேன் என்றார். (ம-7)

## அப்பாவி...

இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில்,

ஜனாதிபதி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒரு மாத காலத்திற்குள் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்களைக் கூறி அப்பாவி விவசாயிகளை ஏமாற்றியுள்ளது.

ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கம் தனது கொள்கை அறிக்கையிலும், தேர்தல் மேடையிலும் நெல் மாஃபியாவை முடிவுக்குக் கொண்டு வந்து, நெல் விவசாயிகளுக்கு அவர்களின் விளைச்சலுக்கு உயர்ந்த விலை வழங்கப்படும் என்று கூறியது.

ஆனால் இவை அனைத்தும் பொய் வார்த்தைகளாக மாற்றப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ் சாட்டியுள்ளார். (ம-7)

## தையி...

காணியின் உரிமையாளர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், காணியின் உரிமையாளர்களுடன் சந்திப்பு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போதுவிகாரை தற்போது அமைந்துள்ள காணி தனியாருக்குச் சொந்தமானது என்றும் அது தொடர்பான ஆவணங்களையும் அவர்கள் இதன்போது சமர்ப்பித்திருந்தனர்.

திஸ்ஸ விகாரைக்குரிய காணி பிறிதொரு இடத்தில் அமைந்துள்ளது என்பதையும் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினர். விகாரை தற்போது அமைந்துள்ள காணிக்கு மேலதிகமாகவும் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த காணி உரிமையாளர்கள் அந்தக் காணியை விடுவித்துத் தருவதுடன், விகாரைக்குச் சொந்தமான அயலிலுள்ள காணியையும் மாற்றீடாகத் தமக்கு வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தனர்.

காணி உரிமையாளர்களது கோரிக்கைக்கு அமைவாக இது தொடர்பில் விகாராதிபதியுடனும், நயினாதீவு விகாரையின் விகாராதிபதியுடனும் ஆளுநர் பேச்சு நடத்திவருகின்றார்.

அத்துடன் இந்த இணக்கப்பாட்டு யோசனை தொடர்பில் புத்தசாசன அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறித்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.02.02
சீட்டிழுப்பு இலக்கம் 5735
A 5 0 9 7 6 2
அத சம்பத
A 9 7 6 2
சீட்டிழுப்பு இலக்கம் 310
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1765
I 02 13 14 62 I
Double Chance 13900

மெகா பவர்
திகதி 02/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2083
U 18 11 20 32 42

ஜய JAYA
திகதி 2025.02.02
சீட்டிழுப்பு இலக்கம் 003
C 5 3 4 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3977
சீட்டிழுப்பு திகதி 02.02.2025
G 04 22 42 77
G

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.02
சீட்டிழுப்பு இலக்கம் 1044
கன்னி 14 36 42 61 கன்னி
21066 26

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பல் லக்‌ஷன
02.02.2025 வெற்றி வாரம் 443
P 4 6 6 6 9 8
73648
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,342,231.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2709
சீட்டிழுப்பு திகதி 2025.02.02 தினம் ஞாயிற்றுக்கிழமை
06 36 38 44 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,723,458.40

சனிதா
திகதி 02.02.2025 வெற்றி வாரம் 4870
17 44 48 71 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,003,760.80
77129

சசிரி
வெற்றி வாரம் 614
சீட்டிழுப்பு திகதி 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை
23 46 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4421
சீட்டிழுப்பு திகதி 02.02.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
08 09 16 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,834,001.20
193498

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 36 33 43 51 71
1885
02.02.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.563,968,483.60

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2535
சீட்டிழுப்பு திகதி : 2025.02.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,145,823.20
அத கோடிபதி ADA KOTIPATHI
08 31 43 48 F
108041

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ENGLISH
Grade 6 - O/L
◆Grammar ◆Text Book
◆Speaking ◆Presentation
◆Monthly Exam ◆Model Exam
(3294)
By : P.MATHAN
NEWTON Group Classes
077 792 3653 NALLUR


# சட்டவிரோத சொகுசு வாகனங்களை உபயோகித்த முக்கிய புள்ளிகளுக்கு செக்

## அதிரடி காட்டினார் ஜனாதிபதி அநுர

சட்டவிரோதமான முறையில் சொகுசு வாகனங்களை நாட்டுக்குள் கொண்டுவந்து பயன்படுத்திய அரசியல் வாதிகள் விரைவில் கைதுசெய்யப்படுவார்கள் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் - பொல்பித்திகம பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது, கடந்த காலங்களில் வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் புதிய சொகுசு வாகனங்களை சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்து பலர் பயன்படுத்தியிருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல்வாதிகளாவர்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் லொஹான் ரத்தவத்த போன்றவர்களின் சட்டவிரோத வாகனங்கள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டன.

தற்போது முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய, இன்னும் சில நாட்களில் மேலும் ஓரிருவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்படக்கூடும் என்றார்.(ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (3204)
076 825 7716 (ஆகாஸ்)



Australia visas

மிகச் சிறந்த நாடுகளில் ஒன்றான ஆஸ்திரேலியாவிற்கு செல்ல அரிய வாய்ப்பு
● Visit Visa
● Student Visa
➡ மிகக் குறுகிய காலத்தில் செல்ல முடியும்.
➡ குடும்பமாகவும் செல்லலாம்.
➡ சட்டத்தரணி மூலம் ஒப்பந்தம்.
➡ ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட விசாக்கள் மீள விண்ணப்பித்து தரப்படும்.
➡ 99% உத்தரவாதம்.
(3306)
மேலதிக விபரங்களுக்கு முன்பதிவு செய்து நேரில் வரவும்
13 வருடகாலமாக தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்ற ஒரே ஒரு நிறுவனம்
Winstar Consultants Pvt Ltd
45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
077 077 6979


# முன்னாள் ஜனாதிபதி ரணில் இன்று லண்டனுக்கு விஜயம்

(கொழும்பு)

"நமது காலத்தில் பெரும் பிரச்சினைகளை கையாளுதல்" என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் விசேட கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று திங்கட்கிழமை (03) லண்டனுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

லண்டன் - கொன்வே மண்டபத்தில் 5 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வில், பொருளாதார ரீதியில் பாதாளத்தில் வீழ்ந்த இலங்கையின் மறுமலர்ச்சி திட்டம், ஊழல் மோசடி, மனித உரிமை மீறல் நெருக்கடிகளை எதிர்கொள்ளல் மற்றும் 2019 ஆம் ஆண்டில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளினால் முன்னெடுக்கப்பட்ட உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைத் தாக்குதல்கள் போன்ற விடயங்கள் குறித்து ரணில் விக்கிரமசிங்க இந்த நிகழ்வில் சிறப்புரை ஆற்றவுள்ளார். (ம-7)

## மாணவர்களுக்கு...

பொலிஸ் குழு வவுனியா, வைரவப்புளியங்குளம், புகையிரத வீதி ஒன்றில் தனியார் கல்வி நிலையத்திற்கு அருகில் அமைந்திருந்த சிறிய வெற்றிலை கடை ஒன்றினை சுற்றி வளைத்து திடீர் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த வர்த்தக நிலையத்தில் விற்பனைக்கு தயாராக இருந்த 140 கிராம் மாபா, ஒரு கிலோ மாபா கலந்த பாக்கு உள்ளிட்ட போதைப்பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டது. இதனையடுத்து குறித்த வர்த்தக நிலையத்தை நடத்தியவர் கைது செய்யப்பட்டார். (ம-7,250)

பட்டுள்ளார்.

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்வதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி தலைமையில் விசேட


தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (ஆண்), கணிய அளவையாளர்கள் (பெண்), அலுவலக உத்தியோகத்தர் (பெண்), மேசன் தொழிலாளர்கள் தேவை
கதிர் இன்ஜினியரிங் கொன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்திற்கு பருத்தித்துறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமான வேலைக்கு தகுதியான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (ஆண்), கணிய அளவையாளர்கள்(பெண்), அலுவலக உத்தியோகத்தர்(பெண்), மேசன் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். (807)
தொடர்பு : 077 948 7659



காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 25 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
● பலாலி றோட் ஊரெழுப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300 m
● பலாலி புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300 m இருவழிப் பாதை கொண்டது.
● நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல், வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.
(3310)
தொடர்புகளுக்கு :
077 623 4204
076 755 8606



பணியாளர் வெற்றிடம்
யாழ்ப்பாணம்
➢ அலங்கார மின் விளக்குகள் விற்பனையாளர்கள் (ஆண்கள், பெண்கள்) - (கணணி அறிவுடன் முன் அனுபவம் உடையவர்கள்).
➢ சாரதிகள் (AD) - 50 வயதிற்கு மேற்பட்டவர்கள்
➢ EPF / ETF கொடுப்பனவு வழங்கப்படும்.
➢ நிரந்தர தொழில்.
❖ சுய விபரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.
(3307)
ESS JEY ELECTRICALS,
NO.09, STANLEY ROAD, JAFFNA.
TELE - 021 222 2564, 021 222 7430



V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2184)



மொத்தக் கொள்வனவுகள்
மொத்தக் கொள்வனவு, டெலிவரிகள் வடமராட்சி சில்லறை கடைகளிற்கு பொருட்கள் கொள்வனவுகள், இலவச Home டெலிவரிகளினை Happy Supermarket உரும்பிராயினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.
(806)
Happy Supermarket - உரும்பிராய்
076 800 6500/ 077 780 8030


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org